**செய்தி வெளியீடு எண்:002** **நாள் : 03.01.2015**

**செய்தி வெளியீடு**

## <u>தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறை</u>

தமிழக சட்டமன்றத்தில் மாண்புமிகு தமிழ்நாடுமுதலமைச்சர் அவர்களால் விதி எண். 110 ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் ஒன்றான ‘‘**விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்கமுறை திட்டத்தின்**’’கீழ் விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தரப் பயணத்திட்டத்தினை அனைத்து மாவட்டங்களிலும் 05.01.2015 முதல் அனைத்து வட்டாரங்களிலும் செயல்படுத்துவது தொடர்பான மாநில அளவிலான சிறப்பு ஆய்வுக்கூட்டம் 02.01.2015 அன்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் சென்னையில் நடைபெற்றது.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.அக்ரி.எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும் போது தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி விவசாயிகளின் வாழ்வாதரத்தை உயர்த்தும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள் வேளாண்மைத் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில், 2011–2012ஆம் ஆண்டில் உணவுதானிய உற்பத்தியில் அதிகம் பெற்றமைக்கான மத்திய அரசின் கிரிஷிகர்மான் விருதும், 2012–2013ஆம் ஆண்டில் ‘‘அக்ரிகல்சர் டுடே’’ என்னும் பத்திரிகையால் வேளாண்மையில் தலைமை விருதும், 2013–2014ஆம் ஆண்டில் ‘‘இந்தியாடுடே’’ என்னும் பத்திரிகையால் வேளாண்மையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக கவுரவிக்கப்பட்டும், பயறுவகை உற்பத்தியில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டு மத்தியஅரசால் கிருஷிகர்மான் விருது வழங்கப்படவுள்ளது என்றும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி இந்த ஆண்டு உணவுதானிய உற்பத்தியில் 145 இலட்சம் மெ.டன் சாதனை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும், ‘‘விவசாயிகள் குழுசார்ந்த நிரந்தர பயணத்திட்டம்’’ வேளாண் மற்றும் இதர சகோதரத் துறைகளின் பங்கேற்புடன் 5.1.2015 முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் வேளாண்மைத் துறை மூலம் 379 வட்டாரங்களில், 12559 கிராம ஊராட்சிகள், 131 பேரூராட்சிகள், ஒரு நகராட்சி உள்ளிட்ட பயிர் சாகுபடி பகுதிகளை உள்ளடக்கி 2078 தொகுதிகள் உருவாக்கப்பட்டு, இந்த 2078 தொகுதிகளும் 16624 பகுதிகளாக பிரிக்கப்பட்டு, நிரந்தர பயணத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் அம்மா பண்ணைமகளிர் குழுக்கள், பயிர் ஆர்வலர் குழுக்கள் மற்றும் விவசாயிகள் ஆர்வலர் குழுக்களும் ஈடுபடுத்தப்பட வேண்டும். தோட்டக்கலைத் துறை மூலம் 6 வட்டாரங்களில், 65 கிராம ஊராட்சிகள் உள்ளிட்ட தோட்டக்கலைப் பயிர் சாகுபடி பகுதிகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ள 39 தொகுதிகளில் தோட்டக்கலைத் துறையின் 39 உதவி வேளாண்மை அலுவலர்கள் நிரந்தர பயணத்திட்டம் 5.1.2015 முதல் மேற்கொள்ள வேண்டும். புதிய தொழில்நுட்பங்களையும் வேளாண்மைத்துறை மூலம் வழங்கப்படும் அனைத்து திட்டங்களுக்கான இடுபொருட்களின் பயன்பாடு மற்றும் இடுபொருட்கள் இருப்பு விவரங்களை விவசாயிகள் நேரில் அறிந்து கொள்ளும் வண்ணம் விவசாய விரிவாக்கப் பணியாளர்கள் நேரடியாக கிராமங்களுக்குச் சென்று விரிவாக்கப் பணி மேற்கொள்ளும் விதமாக இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின் படி வேளாண்மைத் துறை அனைத்து துறைகளின் ஒத்துழைப்புடன் சிறப்பாக செயல்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வேளாண்மை இயக்குநர் திரு.மு.ராஜேந்திரன், இ.ஆ.ப விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயண திட்ட செயலாக்கம் குறித்த வழிமுறைகளை எடுத்துரைத்தார். இத்திட்டம் இந்தியாவிலேயே இரண்டு மாநிலங்களில் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் இத்திட்டம் அறிவிக்கப்பட்ட நாள் முதல் இத்திட்டம் செயலாக்கம் குறித்த பல்வேறு கூட்டங்கள் நடைபெற்று தமிழகத்தில் உற்பத்திஇருமடங்கும் விவசாயிகளின் வருமானம் மும்மடங்கும் உயர்த்திடும் நோக்கில் வித்திடப்பட்டுள்ள இரண்டாம் பசுமைப்புரட்சிக்கு உறுதுணையாக இத்திட்டம் இருக்கும்.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வட்டாரத்திலுள்ள ஊராட்சிகள் அவ்வட்டாரத்திற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள உதவி வேளாண் அலுவலர்களுக்கு சமமாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு உதவி வேளாண் அலுவலருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஊராட்சி கிராமங்கள், 8 பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

2015 சனவரி முதல் ஒவ்வொரு மாதமும் இரண்டு வாரங்களில் திங்கள் முதல் வியாழன் வரை முதல் வாரத்தில் 4 நாட்களும், இரண்டாம் வாரத்தில் 4 நாட்களும், 8 நாட்களில், 8 பகுதிகளுக்கும் நிரந்தரபயணத் திட்டம் வகுக்கப்பட்டு அதே பயணத் திட்டம் மாதத்தின் 3 மற்றும் 4ம் வாரங்களிலும் பின்பற்றப்படும். இதன்படி ஒவ்வொரு கிராமத்திற்கும் உதவி வேளாண்மை அலுவலர்கள் குறிப்பிட்ட கிழமைகளில் இருவாரத்திற்கு ஒருமுறை கிராமங்களுக்கு சென்று விவசாயிகளிடையே தொழில்நுட்ப பரவலாக்கம், பண்ணையளவில் அமைக்கப்பட்டுள்ள விவசாய

விளைபொருள் குழு உறுப்பினர்களையும் சந்தித்து உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் வழங்குவர். மேலும் பயிர் சாகுபடி தொடர்பான இடர்பாடுகளை நீக்கி உரியமுறையில் விளைபொருட்களை சந்தைப்படுத்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்கமுறை சனவரி மாதம் 5ம்தேதி துவங்கப்படுகிறது. எனவே இந்த பணிகளை வேளாண் துறை அலுவலர்கள் சிறப்பாக செயல்படுத்தி விவசாயிகளுக்கு தொழில்நுட்பம் குறித்தும், உற்பத்தியை பெருக்குவது குறித்தும் ஆலோசனைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

8 ஆண்டுகளுக்கு முன்பு வரை இருந்த பயிற்சி வழி தொடர்பு திட்டம் மேம்படுத்தப்பட்டு விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயண திட்டமாக உருவாக்கப்பட்டு, தற்போது மீண்டும் புத்துயிர் தரப்பட்டுள்ளது. இத்திட்ட செயலாக்கம் மூலம் விவசாயிகள் மற்றும் விவசாய அலுவலர்களுக்கு இடையிலான தொடர்பு மேலும் வலுப்பெறும்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மைதுறை இயக்குநர், முனைவர். மு. ராஜேந்திரன், இ.ஆ.ப, அரசு இணைச் செயலர் திரு.செ. இராஜேந்திரன், இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர், திரு.லி.சித்திரசேனன், இ.ஆ.ப, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர், திரு.செ.மனோகரன், இ.ஆ.ப, வேளாண்மை பொறியியல் துறை, தலைமைப் பொறியாளர் திரு.மு. செந்தில், ஆகியோர் பங்கேற்று விவசாயிகள் சார்ந்த வேளாண் விரிவாக்க முறையினை அனைத்து துறைகளின் ஒத்துழைப்புடன் சிறப்பாக செயல்படுத்திட வழிமுறைகளை எடுத்துரைத்தனர்.

இந்த சிறப்பு ஆய்வுக் கூட்டத்தில் அனைத்து மாவட்ட வேளாண்மை இணைஇயக்குநர்கள், மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர்கள், மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர்கள், வேளாண்மை துணை இயக்குநர்கள் (வேளாண் வணிகம்) மற்றும் செயற்பொறியாளர்கள்ஆகியோர் பங்கேற்றனர்.

வேளாண்மை இயக்குநர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**